# <u>லோக் அதாலத் நீதிமன்றம், கரூர்.</u>

**<u>முன்னிலை</u>** : திரு. எஸ்.பி. பரத்குமார், எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்-1, கரூர்.

2026-ம் ஆண்டு ஜீன் மாதம் 13-ம் நாள் சனிக்கிழமை

**<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.3877/2025</u>**

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
கரூர் நகர காவல் நிலையம்.
(குற்ற எண்.134/2025) .... குற்ற முறையிடுபவர்

**.../ எதிர்/...**

1. பரணிபாண்டி,
த/பெ. ரெங்கசாமி
2. விஸ்வேஷ்வரன்,
த/பெ.சரவணன் .... 1, 2 எதிரிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 26.09.2025-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர்-நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் எதிரி தாமாக முன்னிலையாகியும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து வந்து, இறுதியாக இன்று விசாரணைக்கு வரப்பட்டு, இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

1. 14.02.2025ம் தேதி 21.00 மணியளவில் கரூர் நகர காவல் சரக எல்கைக்குட்பட்ட கருப்பாயி கோவில் இறக்கம் அமராவதி ஆற்றுப்படுகை அருகில் இவ்வழக்கின் எதிரிகள் பரணிபாண்டி த/பெ.ரெங்கசாமி மற்றும் விஸ்வேஷ்வரன் த/பெ.சரவணன் ஆகிய இருவரும் சேர்ந்து தமிழக அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய போதை பொருளான கஞ்சாவை விற்று ஆதாயம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் சுமார் 250 கிராம் கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்ததாக கரூர் நகர காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது ச/பி.8(c), 20(b)(ii)(A) NDPS Act-ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. 1, 2 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்காவணங்களின் நகல்கள் யாவும் எதிரிகளுக்கு பிரிவு 230 BNS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகள் மீது பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act-இன் கீழ் குற்றச்சாரம்சம் எடுத்துக் கூறி வினவிய போது எதிரிகள் குற்றத்தை தன்னிச்சையாக ஒத்துக்கொண்டுள்ளனர்.

3. 1, 2 எதிரிகளின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலைக் கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரிகள் மீதான பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act-இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டு விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

4. முடிவில், 1, 2 எதிரிகளின் பதிலைக் கருத்தில் கொண்டு எதிரிகளின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act-இன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து 1, 2 எதிரிகளுக்கு 8(c), 20(b)(ii)(A) NDPS Act-பிரிவின் கீழான குற்றத்திற்கு அபராதம் தலா ரூ.1000/- விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 1 மாதம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும் பிரிவு-264 BNSS ன் கீழ் லோக் அதாலத் நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.மொத்த அபராதம் ரூ.2000/-

5. இவ்வழக்கில் R.P.No.150/2025 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான கஞ்சாதுாள் ஏற்கனவே மல்கானாவில் ஒப்படைத்து அழிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஜீன் மாதம் 13-ம் நாள் லோக் அதாலத் நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(sd)S.P. Barathkumar

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**